**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>நிறைவேற்று மனு எண்.5/2025</u>**

பெயர்–திரு.கோவிந்தன் நாள்.16.07.2026

எ.ம.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**எ.மா.சா.1 : மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

சின்னமுத்தான் என்பவர் எதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. மனுவில் அவர் எழுதி போட்ட எந்த சங்கதிகளை நான் எனது வழக்கறிஞர் மூலம் படித்து தெரிந்து கொள்ளவில்லை. நான் எழுதி போட்ட பிரமாணப்பத்திரிக்கை யார் சொல்லி எழுதி போட்டேன் என்றால் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் நான் சொல்லவில்லை. ஏற்கனவே வண்டித்தடத்தில் நானும், 2, 3 எதிர்மனுதாரர்களான நைனப்பன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் இடையூறு செய்வதாக நீதிமன்றத்தில் மனுதாரர் சின்னமுத்தான் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். ஆனால் நாங்கள் இடையூறு செய்யவில்லை. அசல் வழக்கிலும் மனுதாரரை இடையூறு செய்யவில்லை பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக எதிருரை தாக்கல் செய்து எதிர் வழக்காடி வந்தோம் என்றால் சரிதான்.

இவ்வழக்கின் தீர்ப்பாணையில் இடையூறு செய்யக்கூடாதென எங்களுக்கு எதிராக தீர்ப்பானை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நான் படித்து பார்க்கவில்லை. தீர்ப்பானண விபரத்தை நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி தடத்தில் மனுதாரர் செல்வதை தீர்ப்பாணைக்கு பிறகு மீண்டும் நானும் 2, 3

எதிர்மனுதாரர்களும் தடுத்து இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வண்டித்தடத்திற்கு ஒட்டினாற்போல் மேற்கே மனுதாரருக்கு பூமி உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தில் மனுதாரர் விவசாயம் செய்து வருகிறார் என்றால் இல்லை. மேற்படி மனுதாரரின் பூமி விவசாயம் செய்யாமல் கடந்த மூன்று ஆண்டுகளாக தரிசாக உள்ளது. நான் சொல்வது பொய் என்றாலும், அசல் வழக்கின் போது நான் மனுதாரரை தடுத்ததால் மனுதாரரின் பூமி தரிசாக இருந்தது என்றாலும், தீர்ப்பாணைக்கு பிறகு மனுதாரர் அவரது சொத்தில் விவசாயம் செய்து வருவரை தெரிந்து கொண்டே மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மனுதாரரின் பூமியில் விவசாயம் செய்து கூலி ஆட்களை கடந்த 10.05.2024ல் வண்டித்தடத்தின் வழியாக சென்று வருவதை நானும் மற்ற எதிர்மனுதாரர்களும் தடுத்தோம் என்றால் சரியல்ல. தற்போது வண்டித்தடம் உள்ள பூமி மனுதாரரின் தாயாருக்கு பாத்தியப்பட்ட பூமி என்றால் சரிதான். வண்டித்தடத்திற்காக நானும் மற்றும் 11 பேர் சேர்ந்து வண்டித்தடத்தை கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். கிருஷ்ணன் என்பவர் வண்டித்தடத்தை கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் மற்றும் 2, 3 எதிர்மனுதாரர்கள் சுமூக உறவில் உள்ளோம் என்றால் சரிதான். 2, 3 எதிர்மனுதாரர்களுக்கும் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது கிருஷ்ணன் வண்டித்தடத்தை உபயோகிக்கிறார் என்றால் சரிதான்.

வண்டித்தடத்தை கிரையம் பெற்ற 11 நபர்களில் ஒரு நபரான நாராயணன் என்பவரிடமிருந்து கிருஷ்ணன் ஒரு பங்கு வாங்கியுள்ளார். நாராயனின் சொத்தை கிரையம் வாங்கவில்லை வண்டித்தடத்தில் மட்டும் நாராயணின் பங்கை கிருஷ்ணன் கிரையம் பெற்றுள்ளார். கிருஷ்ணமும் வண்டித்தடத்தை ஓட்டிக்கொள்ள உரிமை இல்லை என்றால் சரியல்ல. சின்னமுத்தான் என்னையோ, நைனப்பனையோ வண்டித்தடத்தில் செல்ல

வேண்டாம் என தடுத்ததில்லை. ஆனால் வண்டித்தடத்தில் கிருஷ்ணனுக்கு உரிமையில்லை என மனுதாரர் ஆட்சேபனை செய்கிறார் என்றால் சரிதான். மனுதாரரின் ஆட்சேபனையை மீறி நைனப்பன் மற்றும் கிருஷ்ணன் வண்டித்தடத்தின் முன் பகுதியில் சுமார் 3700 லோடு செம்மண் எடுத்தார்களா என்றால் சரியல்ல. மேற்படி செம்மண் லோடு எடுக்கக்கூடாதென மனுதாரர் ஆட்சேபித்த காரணத்தினாலும் மேற்படி வண்டித்தடத்தில் கிருஷ்ணனுக்கு உரிமையில்லை என ஆட்சேபித்த காரணத்தினாலும் மனுதாரருக்கும், கிருஷ்ணனுக்கு விரோதம் உள்ளது என்றால் சரிதான். எனவே கிருஷ்ணனின் தூண்டுதலின் பேரில் தான் அசல் வழக்கு மற்றும் தற்போது நடைபெறும் நிறைவேற்று மனுவையும் நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

தொடர்ந்து மனுதாரர் விவசாயம் செய்யக்கூடாதென நானும் நைனப்பனும் சேர்ந்து கிருஷ்ணனுக்கு ஆதரவாக வண்டித்தடத்தில் மனுதாரர் செல்வதை தடுத்து நிறுத்து இடையூறு செய்கிறோம் என்றால் சரியல்ல. தீர்ப்பாணையை பற்றி மனுதாரர் எடுத்துக்கூறியும், மனுதாரரை அசிங்கமான வார்த்தைகளால் பேசி இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வண்டித்தடம் பிரச்சினை காரணமாக மனுதாரர் எங்கள் மீது பங்களாபுதூர் காவல் நிலையத்தில் தீர்ப்பாணைக்கு பிறகு புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். அதன் பின்பு ஆவணங்களை பரிசீலித்து பார்த்த பின்பு எங்களுக்கும் உரிமை உள்ளது என காவல் நிலையத்தில் தெரிவித்து அனுப்பிவிட்டனர். மனுதாரர் வண்டித்தடத்தில் அவர் செல்வதை தடுப்பதாக சொல்லி புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

காவல் நிலையத்தில் இது சிவில் சம்மந்தமான வழக்கு எனவே இதை நீதிமன்றத்தை அனுகுமாறு கூறிவிட்டார்கள் என்றால் சரிதான். நாங்கள் வண்டித்தடத்தை உபயோகிக்க கூடாது என மனுதாரரை தடுத்ததால் தான் காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான்

தடுக்கவில்லை. நான் தடுத்து இடையூறு செய்துவிட்டு தற்போது நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து தப்பிப்பதற்காக தடுக்கவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனவே நாங்கள் இடையூறு செய்திருப்பதால் மனுப்படி எங்களை சிவில் கைது செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

District Munsif